மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 587/2023

பெயர் : சரஸ்வதி (PW1)

க/பெ : செல்வராஜ்

வயது :

கிராமம் :

தாலுகா :

Calling :

(A1 Prabakaran @ Gnanaraj A2 Chandrasekar are present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11 th day of March 2025.

<u>முதல் விசாரணை</u>

1)நான் பச்சைபெருமாள்புரத்தில் வசிக்கிறேன்.நான் இல்லதரசியாக உள்ளேன்.சாட்சி செல்வராஜை தெரியும் அவர் என் கணவர்.சாட்சி வன்னியபெருமாளை தெரியும்.அவர் என் பக்கத்து வீட்டுக்காரர்.ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2)எதிரிகளுக்கும் எனக்கும் சொத்து பிரச்சனை இருந்தது.மூன்றரை வருடங்களுக்கு முன்பாக மாதம் சரியாக நினைவில் இல்லை 14 ஆம் தேதி 3.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது என் கணவரை 1 வது எதிரி அங்கு வந்து கம்பு வைத்து மூக்கிலும், முதுகிலும் அடித்தார்.நான் அதை தடுக்க சென்றபோது 1 வது எதிரி என்னை கீழே தள்ளிவிட்டு என் முடியை சுற்றி என்னை ஒரு மிதித்துவிட்டார்.எதிரிகள் உன்னை விற்க விடமாட்டேன் என்று மிரட்டினார்கள்.காயம் ஏற்பட்டவுடன் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம்.

3)என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கைரேகை என்னுடையததுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நேராக மருத்துவமனைக்கு சென்றோம் அங்கிருந்து மருத்துவர்கள் தகவல் சொல்லி தான் போலிசார்

மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான்.புகார்மனுவை எழுதியது யார் என்றால் என்னுடன் இருந்த ஒரு பையன் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் வைத்து எழுதினார்.புகார் மனுவினை நான் ஓட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் வைத்து கொடுத்தேன்.போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்து விட்டு காவல்நிலையம் வந்து புகார் கொடுக்குமாறு தெரிவித்தார்.புகார் மனுவினை எழுதியவர் பெயர் எனக்கு தெரியாது.

2)புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரமும் எத்தனை பக்கம் எழுதியிருந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்,எனக்கு படிப்பறிவு இல்லை.புகார் மனு எழுதியவர் என்னுடன் காவல்நிலையம் வரவில்லை,அவர் மருத்துவமனைக்கு வந்த யாரோ ஒருவர் தான்.புகார் மனுவை எழுதிய நபரை போலிசார் விசாரித்தார்களா என்றால் அவர் காவல்நிலையத்திற்கு வரவில்லை.

3)ஆஜர் எதிரிகள் இருவரும் என் உறவினர்கள்.சம்பவத்திற்கு முன்பாக நான் எதிரிகள் மீது பத்து முறையாவது புகார் கொடுத்திருப்பேனா என்றால் பத்து முறை அல்ல அதற்கு மேல் பல முறை புகார் கொடுத்துள்ளேன்.என் பக்கத்து வீட்டுக்காரர்கள் மீதும் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

4)நான் சொன்ன மாதிரி நான் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.எதிரிகள் மீது நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

5)என் வீட்டு முன்பாக உள்ள ஜேசுமணி மீது அவர் குடியிருக்கும் வீடு எனக்கு பாத்தியப்பட்டது என்று உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்தேன் ஆனால் அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகவில்லை.எங்கள் வீட்டு அருகில் உள்ள புளியமர தோப்பு எனக்கு பாத்தியப்பட்டது என்று உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்தேன் ஆனால் அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகவில்லை.

6)நான் என் ஊரைச் சுற்றியுள்ள இடங்கள் அனைத்தும் எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்து அது எனக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல.அதே போல் எதிரிகள் மீதும் பொய்யாக புகார் கொடுத்து அவர்கள் உரிமையியல் வழக்கில் எனக்கு ஆதரவாக செயல்படவேண்டும் என்பதற்காக பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.